# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை—600 032.
தொலைபேசி: 044—22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை—600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்:0385/2016

ஆணை எண்:150 /2016

நாள்: 16 /09 /2016

திரு.R.ஸ்ரீதரன்,
துணைத்தலைவர், கிள்ளியூர் பேரூராட்சி,
பறையன்விளை, ஆப்பிக்கோடு,
தொலையாவட்டம் அஞ்சல் —629 157

மனுதாரர்

செயல் அலுவலர்,
கிள்ளியூர் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

எதிர் மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் பேரூராட்சியில் வசித்து வரும் திரு.R.ஸ்ரீதரன், அவர்களின் உரிய படிவத்தில் பெறப்பட்ட 24.05.2016 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறை மன்ற நடுவத்தில் 26.05.2016 அன்று பெறப்பட்டு, 0385/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:—

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் பேரூராட்சியின் துணைத்தலைவராக உள்ள திரு.R.ஸ்ரீதரன், மனுதாரர், நாகர்கோவில் மாவட்டம், கிள்ளியூர் பேரூராட்சி தலைவர் இராஜரத்தினம் என்பவர் 18/88 எண் கொண்ட வீட்டில் வசிக்கிறார் எனவும், அந்த வீடு 2000 சதுரஅடி கொண்டது எனவும், C மண்டலத்தில் அமைந்தது எனவும், 8 ஆண்டு முதல் 10 ஆண்டு காலத்திற்குள் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடம் எனவும், அதற்கு ஆண்டு வரியாக ரூ.366/– மட்டும் செலுத்தி வருகிறார் எனவும், அந்த வீட்டிற்காக துறை ரீதியாக எந்த அனுமதியும் பெறவில்லை எனவும் மேலும் அவரது மகன் ஆர்.அஜின் பெயரில் 18–88/1 என்ற எண் கொண்ட வீடு இருப்பதாக பேரூராட்சியில் பதிவு செய்து ரூ.120/–யை எந்த வரைப்பட அனுமதியும் பெறாமல் வரி கட்டிக் கொண்டு இருக்கிறார் எனவும் தெரிவித்து அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி மனுதாரர் தனது 07.11.2015 நாளிட்ட புகார் மனுவில் நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் துணை இயக்குநருக்கு முறையீடு செய்துள்ளார். அம்முறையீடு மனு பேரூராட்சிகளின் இயக்குநரின் கடிதம் ந.க.எண்14500/2015/இ2, நாள்.27.04.2016–ன் வாயிலாக இம்முறைமன்ற நடுவத்திற்கு நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டு, 06.05.2016 அன்று இம்முறைமன்றத்தில் பெறப்பட்டுள்ளது.

2. 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யும் முறை) விதிகள், விதி 6ல் நிர்ணயிக்கப்பட்டவாறு கட்டணம் ரூ.10/– மதிப்பிலான நீதிமன்ற கட்டணவில்லை ஒட்டப்பட்டு முறையீட்டு மனு உரிய படிவத்தில் (படிவம்–1) சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதால், அவ்வாறே இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்திட, முறைமன்ற நடுவ அறிவிப்பாணை, நாள்.12.05.2016 வாயிலாக மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி மனுதாரர் தனது முறையீட்டு மனுவினை உரிய படிவத்தில் நீதிமன்ற கட்டணவில்லையுடன் 24.05.2016 அன்று சமர்ப்பித்துள்ளார்.

3. இப்புகார் மனு மீது முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.0385/2016/TPT நாள்.30.05.2016-ன் வாயிலாக விளக்க அறிக்கை சமர்ப்பித்திட செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. இதனிடையே இப்புகார் மனு சம்பந்தமான விசாரணைக்கு மனுதாரரை ஆஜராகுமாறு முறைமன்ற அறிவிப்பாணை எண்.0385/2016/TPT நாள்.27.07.2016-ன் வாயிலாக ஆணையிடப்பட்டது.

4. 31.08.2016 அன்று நடைபெற்ற விசாரணையின் போது மனுதாரர் கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

"நான் கிள்ளியூர் பேரூராட்சியில் 2011 ஆண்டு முதல் துணைத்தலைவர் பொறுப்பில் இருக்கிறேன். உள்ளாட்சி முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்வதற்கு முன்பு லஞ்ச ஒழிப்பு துறைக்கு மனு செய்திருந்தேன். அவர்கள் உள்ளாட்சி முறைமன்ற நடுவத்திற்கு மனு செய்ய சொன்னார்கள். 24.05.2016 அன்று உரிய படிவத்தில் என்னால் மனு செய்யப்பட்டது. பின்பு 24.07.2016 அனுப்பிய கடிதத்தில் படிவம் 1 மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய ஒரு நகல் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பிய கடித நகல், கிள்ளியூர் பேரூராட்சிக்கு அனுப்பிய ஒரு கடித நகல், தகவல் அறியும் உரிமை சட்டத்தில் பெற்ற நகல் ஆகியவைகளை அனுப்பி உள்ளேன். அப்போது என்னால் உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்திற்கு தனியாக மனு அனுப்பவில்லை. அதற்கு பின்பு 14.07.2016 அன்று நாளிட்டு உதவி பதிவாளர் உள்ளாட்சி அமைப்புகள் தீர்பாணயத்திற்கு ஒரு கடிதம் அனுப்பி இருந்தேன் என தெரிவித்து கொள்கிறேன். திரு ராஜரத்தினம் கிள்ளியூர் பேரூராட்சியின் தலைவராக இருந்தார். ஆப்பிக்கோடு கதவு எண். 18/88 2002 ஆண்டு கட்டப்பட்டது. இதற்கு இவர் மகன் திரு.அஜின் மற்றும் திரு. ராஜரத்தினம் இருவர் பெயர்களிலும் 2014-2015 சொத்துவரி வசூலிக்கப்பட்டுள்ளது. பேரூராட்சியில் கட்டிடம் கட்டுவதற்கு எந்த அனுமதியும் பெறாமல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது அவரது பெயரில் சொத்துவரி ரூ366/. மகன் பெயரில் சொத்துவரி ரூ.120/- வரி விதிப்பு செய்து வசூல் செய்துள்ளார்கள். இரண்டு பேர் பெயரிலும் பேரூராட்சியில் கட்டிடம் கட்ட வரைப்படம் ஏதுமில்லை. கட்டிடம் வரைபடம் மற்றும் அங்கீகாரம் இல்லாமல் வீடு கட்டி உள்ளார்கள். 18/88 ராஜரத்தினம் பெயரிலும் 18/88A அவர் மகன் அஜின் பெயரிலும் வீட்டுவரி ரசீது போடப்பட்டு அதன் மூலம் மகனுக்கு ரேஷன் கார்டு பெற்றுள்ளனர். தனிவீடு என்று கூறி பெற்றுள்ளனர். 20 வருடத்திற்கு முன்பு கட்டிய வீடு என்று கூறி நிர்வாக அலுவலர் திருமதி.மாலதி இதற்கு ஆதாரம்

இல்லை என்று கூறிவிட்டார்கள். மருதம்கோடு மின்சாரஅலுவலகத்தில் திரு ராஜரத்தினம் மின் இணைப்பு கோரி விண்ணப்பித்துள்ளார் என தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் அறிந்தேன். 2002 ஆண்டு அவர் மின் இணைப்பு கோரி அளித்த விண்ணப்பம் எனக்கு கிடைத்தது. இதன் நகல் இத்துடன் இணைத்துள்ளேன். எனவே கட்டிடம் 2002–ம் ஆண்டே கட்டப்பட்டிருக்க வேண்டும் என தெரிவித்துக் கொள்கிறேன். இவருடைய வரிவிதிப்பு B மண்டலத்தில் உள்ளது. ஆனால் C மண்டலத்தில் இருப்பதாக குறிப்பிட்டு குறைத்து வரி விதித்து உள்ளனர். இதில் திரு.நவகுமார், திருமதி மாலதி, திரு.பாபு சந்திரசேகருக்கு முன்னால் இருந்த நிர்வாக அலுவலர் திரு.முகமது அலி ஆகிய மூவருக்கும் தொடர்பு மற்றும் பொறுப்பு உள்ளது. பேரூராட்சியில் உரிய அங்கீகாரம் இல்லாமல் கட்டப்பட்ட அந்த கட்டிடத்தை இடித்து தள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்'' என வாக்குமூலம் அளித்தார்.

5. செயல் அலுவலர் 26.08.2016 நாளிட்ட விளக்க அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''கிள்ளியூர் பேரூராட்சிக்கு உட்பட்ட கிள்ளியூர் கிராமம் கீழ் ஆப்பிக்கோடு கதவு எண்.18–88 இவ்வலுவலக சொத்துவரி விதிப்பு பதிவேட்டின்படி திரு.வே.இராஜரத்தினம் என்பவரின் பெயரில் உரிமையாளராக இருந்து வருகிறது. மேலும், இக்கட்டிடத்திற்கு வருடாந்தர சொத்துவரி ரூ.366/. வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும், இக்கட்டிடம் கட்டப்பட்டு சுமார் 20 வருடங்களுக்கு மேலாக இருக்குமென தெரியவருகிறது. அந்தந்த காலத்திற்கேற்ப சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு அன்னாரால் சொத்துவரி செலுத்தப்பட்டுள்ளது. மேலும், மேற்படி கட்டிடத்திற்கு அந்தப் பகுதி B மண்டலத்திலிருந்து வருகிறது. அதனடிப்படையில் கட்டிடம் எண்.18/88–க்கான சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி C மண்டலத்தில் சொத்துவரி நிர்ணயம் செய்யப்படவில்லை.

மேலும், திரு. வே.இராஜரத்தினம், தலைவர், கிள்ளியூர் பேரூராட்சி அன்னார் தனது மகன் திரு.ஆர்.அஜின் என்பவரின் பெயரில் இவ்வலுவலக வரிவிதிப்பு எண்.5046 கதவு எண்.18/88–1க்கு 2014–2015 வருடம் முதல் சொத்துவரி ரூ.120/– (நூற்று இருபது) நிர்ணயம் செய்யப்பட்டு எந்தவிதமான கட்டிட வரைபட அனுமதி பெறாமல் சொத்துவரி இரசீது வழங்கப்பட்டுள்ளது. இது

சம்பந்தமாக துணைத் தலைவரால் வழங்கப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில் கட்டிடம் எண். 18/88–1ல் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு உரிய வரைபட அனுமதி பெற்றுக்கொள்ள அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. 2016–2017ஆம் வருடத்தில் அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கான சொத்துவரி இரசீது நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது'' என தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

6. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, புகார் மனுவுடன் பெறப்பட்ட மின்இணைப்பிற்கான விண்ணப்பம், மனுதாரரின் வாக்குமூலம், செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, சம்பந்தப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றினை பரிசீலிக்கும் போது திரு.இராஜரத்தினம், தனது வீட்டுக் கதவு எண்.18/88க்கு கட்டிட அனுமதி ஏதும் பெறவில்லை என்பதும், கட்டிட அனுமதி பெறாமல் மேற்படி வீட்டிற்கு சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வாறே கட்டிட அனுமதி பெறாமல் அவரது மகன் திரு.ஆர்.அஜின் என்பவரின் பெயரில் 18/88–1க்கு வீட்டுவரி வசூல் செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணை முடிவில் உறுதி செய்யப்படுகின்றது. கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு சொத்துவரி வசூலித்து முறையற்ற கட்டிடங்களை விதிமுறைகளை மீறி மறைமுகமாக முறைப்படுத்தி பேரூராட்சிக்கு இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்பட்ட மேற்படி வீடுகளுக்கு சொத்துவரி வசூலித்து, பேரூராட்சிக்கு இழப்பு ஏற்படுவதற்கு காரணமாக இருந்த உரிய செயல் அலுவலர்கள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படி பேரூராட்சிகளின் இயக்குநருக்கு ஆணையிடப்படுகிறது, மேலும், இந்நேர்வில் திரு,அஜின் என்பவரின் பெயரிலுள்ள 18/88–1 வீட்டிற்கான சொத்துவரி விதிப்பு மட்டுமே ரத்து செய்யப்பட்டுள்ளது. ஆனால், திரு.இராஜரத்தினம் என்பவரின் பெயரிலுள்ள வீட்டுக் கதவு எண்.18/88 கட்டிடத்திற்கும் கட்டிட அனுமதி பெறாமல் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. எனவே, கட்டிட

அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து பேரூராட்சிகளின் சட்டவிதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்க கிள்ளியூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது. இது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவான அறிக்கையை ஒரு மாத காலத்திற்குள் அனுப்பும்படியும் ஆணையிடப்படுகிறது.

2016-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் (பொறுப்பு)

பெறுநர்:

1.திரு.R.ஸ்ரீதரன்,
துணைத்தலைவர், கிள்ளியூர் பேரூராட்சி,
பறையன்விளை, ஆப்பிக்கோடு,
தொலையாவட்டம் அஞ்சல். பின்கோடு–629 157

2. செயல் அலுவலர்,
கிள்ளியூர் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் இயக்குநர்,
குறளகம், சென்னை–108.